| | | |
|---|---|---|
| PLACE | THIRUCHERAI |  |
| PRESENT NAME | THIRUCHERAI | |
| BASE TOWN | KUMBAKONAM | |
| DISTANCE | 24 KM | |
| MOOLAVAR | SARANATHAN | |
| THIRUKKOLAM | NINDRA | |
| THIRUMUGAMANDALAM | EAST | |
| UTHSAVAR | MAMADHALAIPIRAN | |
| THAYAR | SARANAYAKI | |
| MANGALASASANAM | 13 PAASURAMS | |
| PRATYAKSHAM | CAUVERY | |
| THEERTHAM | SARA THEERTHAM | |
| VIMANAM | SARA VIMANAM | |
| NAMAVALI | Sri Saranayagi sameda Sri Saranatha parabramane namaha | |





## STHALA PURANAM:

பிரளய காலத்தில் பிரம்மா இத்தலத்து மண்ணை எடுத்து ஒரு கடம் செய்து அதில் வேதங்களை வைத்து காப்பாற்றியதாக புராணங்கள் கூறுகிறது. ஒரு முறை காவிரித்தாய் பெருமாளிடம் ,""அனைவரும் கங்கையே உயர்ந்தவள். அங்கு சென்று நீராடினால் பாவங்கள் தொலையும் என்று பெருமை பேசுகிறார்கள். அத்தகைய பெருமை எனக்கும் வேண்டும் ,"என கேட்டு இத்தல சாரபுஷ்கரணியில் மேற்கு கரை அரச மரத்தடியில் தவம் இருந்தாள். இவளது தவத்திற்கு மகிழ்ந்த பெருமாள் குழந்தை வடிவில் காவிரித்தாயின் மடியில் தவழ்ந்தார். ""தனக்கு இந்த பெருமை மட்டும் போதாது ,"என காவிரி கூறியவுடன் , கருடவ வாகனத்தில் சங்கு சக்கர தாரியாக ஐந்து லட்சுமிகளுடன் காட்சி கொடுத்து , "வேண்டும் வரம் கேள் ' என்றார். அதற்கு காவிரி ,""தாங்கள் எப்போதும் இதே கோலத்தில் இங்கு காட்சி தர வேண்டும். கங்கையிலும் மேன்மை எனக்கு தந்தருள வேண்டும் ,"என்றாள். பெருமாளும் அப்படியே செய்தார். மூலஸ்தானத்தில் பெருமாளுக்கு இடது பக்கம் காவிரித்தாய் இருப்பதை இன்றும் காணலாம்.

மூலஸ்தானத்தில் பெருமாளுக்கு வலது பக்கம் மார்க்கண்டேயர் வீற்றிருக்கிறார் மார்க்கண்டேயர் இத்தலத்தில் தான் முக்தியடைந்தார். உப்பிலி யப்பன் கோயிலில் தனது மகள் பூதேவியை சிறுவயதிலேயே பெருமாள் விரும்புகிறார். அதற்கு மார்க்கண்டேயர்,""சுவாமி! இவள் சிறு பெண். இவளுக்கு சரியாக உப்பு போட்டு கூட சமைக்க தெரியாது. அப்படி இருக்கும் போது நீங்கள் எவ்வாறு இவளை திருமணம் செய்து கொள்ள முடியும்,"என்கிறார். அதற்கு பெருமாள்,""இவள் உப்பே போடாமல் சமைத்தாலும், அதை நான் திருப்தியாக ஏற்று கொள்வேன்"என்று கூறி பூதேவியை

திருமணம் செய்து கொள்கிறார். அன்றிலிருந்து பெருமாள் உப்பிலியப்பன் என்ற திருநாமத்துடன் உப்பில்லாத நைவேத்தியத்தை ஏற்றுகொள்கிறார்.



மன்னார்குடியில் உள்ள ராஜகோபால சுவாமி சன்னதியின் திருப்பணிக்காக அழகிய மணவாள நாயக்கர் மன்னன் ஆணைப்படி இவ்வூர் வழியாக வண்டிகள் சென்றன. வண்டிக்கு ஒரு கல்வீதம் இக்கோயில் திருப்பணிக்கு நரசபூபாலன் என்பவன் மன்னனுக்கு தெரியாமல் இறக்கி வைத்தான். இதைக்கேள்விப்பட்ட மன்னன் விசாரிக்க இங்கு வந்தான். இதனால் பயந்த நரசபூபாலன், இத்தல பெருமாளை வேண்டினான். பெருமாள் மன்னனுக்கு மன்னார்குடி ராஜகோபாலனாக காட்சி கொடுத்தார். மகிழ்ந்த மன்னன் இக்கோயிலுக்கும் சிறப்பாக திருப்பணிகள் செய்தான்.

இத்தல பெருமாள் கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார். மூலவர் சன்னதியின் மேல் உள்ள விமானம் சார விமானம் எனப்படுகிறது. காவிரித்தாய் இத்தல இறைவனின் தரிசனம் கண்டுள்ளார்.

கோயில் நீளம் 380 அடி. அகலம் 234 அடி. கிழக்கு நோக்கிய 90 அடி உயர பிரமாண்டமான ராஜ கோபுரம். கோயிலுக்கு எதிரில் உள்ள சார புஷ்கரிணியின் மேற்கு கரையில் அகத்தியர், பிரம்மா, காவரி ஆகியோர் தனி சன்னதியில் அருள்பாலிக் கின்றனர். கோயில் உள்பிர காரத்தில் சீனிவாசப்பெருமாள், ஆழ்வார்கள், நம்மாழ்வார், உடையவர், கூரத்தாழ்வார், ராமர், அனுமான், ராஜகோபாலன், ஆண்டாள் மற்றும் சத்தியபாமா, ருக்மணி, நரசிம்ம மூர்த்தி பால சாரநாதர் சன்னதிகள் உள்ளன.

பெருமாளின் 108 திருப்பதிகளுள் ஒன்று. இத்தலத்தில் மட்டும் தான் பெருமாள் ஸ்ரீதேவி , பூதேவி , மகாலட்சுமி , சாரநாயகி , நீலாதேவி என்ற ஐந்து தேவியருடன் அருள்பாலிக்கிறார். இத்தலத்து மண்

தான் தலத்தின் நாயகர் சாரநாதப்பெருமாள் எனப்பட்டார். தலம் **திருச்சாரம்** என்று வழங்கப்பட்டது. இதுவே காலப்போக்கில் மருவி "**திருச்சேறை** ' ஆனது.

. காவிரித்தாய்க்கு காட்சியளித்த தைமாதம் , பூச நட்சத்திரத்தில் வியாழன் சஞ்சரித்த காலமாகும். எனவே 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை தை மாதம் பூச நட்சத்திரத்தில் வியாழன் வரும் போது இந்த சாரபுஷ்கரணியில் நீராடுவது என்பது மகாமகத்திற்கு ஈடானது என்பதால் இதை சிறப்பாக கொண்டாடுகிறார்கள்.



**Ponnal Punul**

| திவ்யதேசம் 015<br>திருச்சேறை (திருச்சேறை) | |
|---|---|
| திருமங்கையாழ்வார் | 1578-1587, 1853,2673(72),2674(115) |
| மொத்த பாசுரங்கள் | 13 |

**திருமங்கையாழ்வார்**

**திருச்சேறை**

1578 கண் சோர வெம் குருதி வந்து இழிய வெம் தழல்போல் கூந்தலாளை
மண் சேர முலை உண்ட மா மதலாய் வானவர்-தம் கோவே என்று
விண் சேரும் இளந் திங்கள் அகடு உரிஞ்சு மணி மாடம் மல்கு செல்வத்
தண் சேறை எம் பெருமான் தாள் தொழுவார் காண்மின்-என் தலைமேலாரே (1)

1579 அம் புருவ வரி நெடுங் கண் அலர்-மகளை வரை அகலத்து அமர்ந்து மல்லல்
கொம்பு உருவ விளங்கனிமேல் இளங் கன்று கொண்டு எறிந்த கூத்தர் போலாம்
வம்பு அலரும் தண் சோலை வண் சேறை வான் உந்து கோயில் மேய
எம் பெருமான் தாள் தொழுவார் எப்பொழுதும் என் மனத்தே இருக்கின்றாரே (2)

1580 மீது ஓடி வாள் எயிறு மின் இலக முன் விலகும் உருவினாளைக்
காதோடு கொடி மூக்கு அன்று உடன் அறுத்த கைத்தலத்தா என்று நின்று
தாதோடு வண்டு அலம்பும் தண் சேறை எம் பெருமான் தாளை ஏத்தி
போதோடு புனல் தூவும் புண்ணியரே விண்ணவரின் பொலிகின்றாரே (3)

1581 தேர் ஆளும் வாள் அரக்கன் தென் இலங்கை வெம் சமத்துப் பொன்றி வீழ
போர் ஆளும் சிலை-அதனால் பொரு கணைகள் போக்குவித்தாய் என்று நாளும்
தார் ஆளும் வரை மார்பன் தண் சேறை எம் பெருமான் உம்பர் ஆளும்
பேராளன் பேர் ஓதும் பெரியோரை ஒருகாலும் பிரிகிலேனே (4)

1582 வந்திக்கும் மற்றவர்க்கும் மாசு உடம்பின் வல் அமணர் தமக்கும் அல்லேன்
முந்திச் சென்று அரி உரு ஆய் இரணியனை முரண் அழித்த முதல்வர்க்கு அல்லால்-
சந்தப் பூ மலர்ச் சோலைத் தண் சேறை எம் பெருமான் தாளை நாளும்
சிந்திப்பார்க்கு என் உள்ளம் தேன் ஊறி எப்பொழுதும் தித்திக்குமே (5)

1583 பண்டு ஏனம் ஆய் உலகை அன்று இடந்த பண்பாளா என்று நின்று
தொண்டு ஆனேன் திருவடியே துணை அல்லால் துணை இலேன் சொல்லுகின்றேன்
வண்டு ஏந்தும் மலர்ப் புறவின் வண் சேறை எம் பெருமான் அடியார்-தம்மைக்
கண்டேனுக்கு இது காணீர்-என் நெஞ்சும் கண் இணையும் களிக்கும் ஆறே (6)

1584 பை விரியும் வரி அரவில் படு கடலுள் துயில் அமர்ந்த பண்பா என்றும்
மை விரியும் மணி வரைபோல் மாயவனே என்று என்றும் வண்டு ஆர் நீலம்
செய் விரியும் தண் சேறை எம் பெருமான் திரு வடிவைச் சிந்தித்தேற்கு என்
ஐ அறிவும் கொண்டானுக்கு ஆள் ஆனார்க்கு ஆள் ஆம்-என் அன்பு-தானே (7)

1585 உண்ணாது வெம் கூற்றம் ஓவாத பாவங்கள் சேரா-மேலை
விண்ணோரும் மண்ணோரும் வந்து இறைஞ்சும் மென் தளிர்போல் அடியினானை
பண் ஆர வண்டு இயம்பும் பைம் பொழில் சூழ் தண் சேறை அம்மான்-தன்னை

கண் ஆரக் கண்டு உருகி கை ஆரத் தொழுவாரைக் கருதுங்காலே (8)

1586 கள்ளத்தேன் பொய் அகத்தேன் ஆதலால் போது ஒருகால் கவலை என்னும்
வெள்ளத்தேற்கு என்கொலோ?-விளை வயலுள் கரு நீலம் களைஞர் தாளால்
தள்ள தேன் மணம் நாறும் தண் சேறை எம் பெருமான் தாளை நாளும்
உள்ளத்தே வைப்பாருக்கு இது காணீர்-என் உள்ளம் உருகும் ஆறே (9)

1587 பூ மாண் சேர் கருங் குழலார்போல் நடந்து வயல் நின்ற பெடையோடு அன்னம்
தேமாவின் இன் நிழலில் கண் துயிலும் தண் சேறை அம்மான்-தன்னை
வா மான் தேர்ப் பரகாலன் கலிகன்றி ஒலி மாலை கொண்டு தொண்டீர்
தூ மாண் சேர் பொன் அடிமேல் சூட்டுமின்-நும் துணைக் கையால் தொழுது நின்றே (10)

1853 வானை ஆர் அமுதம் தந்த வள்ளலை
தேனை நீள் வயல் சேறையில் கண்டு போய்
ஆனை வாட்டி அருளும் அமரர்-தம்
கோனை யாம் குடந்தைச் சென்று காண்டுமே (6)

### சிறிய திருமடல்

2673 கணமங்கை கார் ஆர் மணி நிறக் கண்ணனூர் விண்ணகரம்
சீர் ஆர் கணபுரம் சேறை திருவழுந்தூர் (72)

### பெரிய மடல்

2674 தென்னன் குறுங்குடியுள் செம் பவளக் குன்றினை
மன்னிய தண் சேறை வள்ளலை மா மலர்மேல் (115)

**Festivals :** Thai Poosam - 10 Days Brahmothsavam
10th Day – Car Festival

**Temple Timings:** 6.00 am to 11.00 pm
5.00 pm to 08.00 pm

**Address :** Arulmigu Saranatha Perumal Thirukkoil, Thirucherrai,
Kumbakonam – 612 605.
Thanjavur District, Tamil Nadu.

**Location :** All buses from Kumbakonam to Thiruvarur will go via Thirucherrai

**Nearest Railway Station:** Kumbakonam

**Nearest Airport:** Trichy

**Hotels at Kumbakonam:**

Hotel Green Park Ph: 0435 – 2403912 / 13 / 14

Hotel Chellas: 0435 – 2430336

| | |
|---|---|
| Hotel Adithya: | 0435 – 2421794 / 95 |
| Hotel Le Garden: | 0435 – 2402526 |
| Hotel Rayas: | 0435 – 2432032 |
| Hotel Paradise: | 0435 - 2416469 |

Courtesy: Dinamalar &
Sri Seshadri Swamy
Dr.V.Sadagopan Swamy